திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1969-ல் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்ததன் சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்டேன். நண்பர் திரு. அய்யாசாமி அவர்கள் இந்தக் கேள்வியைத் கொடுப்பதற்கு முன்பு அனுப்பினேன். இன்னும் பதில் வரவில்லை, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions 56 and 57 are postponed.

University Grants Commission Scales of Pay.

* 58. *Q.*—**THIRU M. RAJAH IYER :** Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether all the private Colleges in the State have implemented the University Grants Commission Scales of Salary to their staff ; and

(*b*) if not, the reasons therefor ?

பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள வீதங்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்——

(அ) இம்மாநிலத்தில் உள்ள தனியார் கல்லூரிகள் அனைத்தும் பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள வீதங்களைத் தத்தம் ஆசிரியப் பணியாளர்களுக்கு அளிக்கின்றனவா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. the Minister for Education be pleased to state whether even in the Government Colleges 25 per cent of the language staff have been upgraded as per the recommendations of the University Grants Commission ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. 25 சத வீதம் ஒதுக்கச் சொன்னார்களா, அது நிறைவேற்றப்பட்டதா என்பது சம்பந்தமாகக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லலாம்.

Water-Supply to the Government Erskine Hospital, Madurai

* 59. *Q.*—**THIRU M. RAJAH IYER :** Will the Hon. the Minister for Education and Health be pleased to state the steps so far taken and proposed to be taken to ensure unfailing water-supply to the Government Erskine Hospital, Madurai ?

அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்——

மதுரையில் உள்ள அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு தட்டின்றி நீர் கிடைக்கச் செய்வதற்காக இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளும் இனிமேல் எடுக்கக் கருதும் நடவடிக்கைகளும் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் எல்லைக்குள் நிறைய துளைக் கிணறுகளை அரசு அமைத்துள்ளது. மதுரை ரோட்டரி சங்கம் இரண்டு ஆழமான துளைக் கிணறுகளை மருத்துவமனை சுற்றுப் பகுதிக்குள் நிறுவியுள்ளது. T. V. S. நிறுவனம் ஒரு துளைக் கிணற்றைச் செப்பனிட்டது. இத் துளைக் கிணறுகள் எல்லாம் வேண்டிய அளவு நீரை அளிக்கின்றன. மருத்துவ மனையில் தண்ணீர் பற்றுக்குறை கணிசமான அளவில் தீர்ந்துவிட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

27th January 1970]

திரு. எம். ராஜா அய்யர் : இவ்வளவு கிணறுகள் இருந்தபோதிலும் கூட முனிசிபல் வாட்டர் சப்ளையை எதிர்பார்த்துத்தான் இந்த ஆஸ்பத்திரி நடக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி வைகை நதிக் கரையில் இருக்கிற காரணத்தினுல், இது தன்னிறைவு பெறத்தக்கதாய்—செல்ஃப் சபிஷியண்ட்டாக—இதற்காக என்று தனி வாட்டர் சப்ளை ஸ்கீம் ஒன்றை உருவாக்க சர்க்கார் முன்வருமா ? நான் இரண்டு வார காலம் அந்த ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறேன். நோயின் தொல்லையைவிடத் தண்ணீர் இல்லாமல் தவித்தது பெரும் தொல்லையாக இருந்தது. அதைப் போக்க இந்த ஆஸ்பத்திரி முனிசிபல வாட்டர் சப்ளை ஸ்கீமை டிபெண்ட் செய்யாமல், தனியாக இதற்கென்று வாட்டர் சப்ளை ஸ்கீம் ஒன்றை இந்த சர்க்கார் செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக கோடை காலத்தில் தண்ணீருக்குப் பற்றுக்குறை ஏற்படுவது இயற்கை. அதுவும் இந்த ஆண்டு, அதிக வறட்சியின் காரணமாக என்றைக்கும் ஏற்படாத அளவுக்கு, பற்றுக் குறை ஏற்பட்டது. இருந்தும் மதுரை நகரத்தில் தண்ணீர் பற்றுக் குறை இருந்தபோது, துளைக் கிணறுகள் 7, 8 போடப்பட்டதன் காரணமாக, இந்த மருத்துவ மனைக்குத் தேவையான தண்ணீர் ஓரளவுக்குக் கிடைத்துவந்தது. மதுரை நகரத்திற்கு 17 லட்சம் ரூபாய் செலவில் ஒரு பெரிய தண்ணீர் திட்டம் போடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இன்னொரு திட்டமும் போடப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டால், தண்ணீர் கஷ்டம் தீர்ந்துவிடும். இப்போது இருக்கிற துளைக் கிணறுகள் இந்த மருத்துவ மனைக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் சப்ளை செய்து வருகின்றன.

திரு. வி. தங்கபாண்டியன் : மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு டி.வி.எஸ். ஸ்தாபனமும் ரோட்டரி ஸ்தாபனமும் துளைக் கிணறுகள் மூலம் கொடுக்கிற தண்ணீர் வசதி தொடர்ந்து அளிக்கப்படுமா, அல்லது இடைக் காலத்தில் நிறுத்திக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனைக்குப் பயன்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் ரோட்டரி சங்கத்தால் இரண்டு துளைக் கிணறுகள் போடப்பட்டு, மருத்துவ மனைக்கு ஒப்படைத்திருக்கிறுர்கள். அடுத்து, டி. வி. எஸ். ஸ்தாபனம் ஏற்கனவே பழுதுபட்டு பயன்படாமல் இருந்த கிணறுகளை செப்பனிட்டு நாளொன்றுக்கு 1,000 காலன் தண்ணீர் சப்ளை செய்கிற மாதிரி தந்திருக்கிறுர்கள். அவர்கள் திரும்ப எடுத்துக் கொள்ளும் அபிப்பிராயத்தில் இல்லை.

Teachers Training College, Pudukkottai.

* 60. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether any representation has been received by the Government during August 1968 requesting to admit at least 10 lady students in the Tamil Teachers's Training Course in Teachers Training College, Pudukkottai from the academic year 1969–70 ; and

(*b*) if so, the action taken thereon ?

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, புதுக்கோட்டை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969–70-ம் கல்வி ஆண்டு தொடங்கி புதுக்கோட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தமிழ் ஆசிரியர் பயிற்சிப் பாட முறையில் 10 மாணவிகளையாவது சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டு 1968 ஆகஸ்ட் திங்களில் முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?